Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 21 | நவம்பர் 2015 | கானம் : 4



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME · NO SELF INTEREST · NO NAME · ONLY GOD



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 | நவம்பர் 2015 | கானம் : 4
Delivered by India Post
www.indiapost.gov.in



அக்டோபர் 17 - புரட்டாசி கடைசி சனிக்கிழமை - மஹாரண்யம்
ஸ்ரீ ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் ஆலயத்தில்
அன்னகூடோத்ஸவம், அகண்டதீபம், கூட்டு ப்ரார்த்தனை





Sri Hari:

# NAMADWAAR AUSTRALIA INAUGURATION

44, Oakes Road, Winston Hills
NSW 2153



## 8th November 2015

**8.30-12.30PM - Consecration By Dr.A.Bhagyaji**

Personal Secretary to HH Sri Sri Muralidhara Swamiji

## Video Blessing Message of Sri Swamiji

## 4 PM INAUGURATION Function

- Invocation Prayer
- Welcome Address by Mr.Soma Sekar, Secretary, G.O.D Australia
- Namadwaar - 'Concept to Completion' by
  Mr.Muthu Ramatchandirin, Executive Committe Member, G.O.D Australia
- Commemorative Address by Dr.A.Bhagyaji
- Felicitations by Guests of Honour
  Hon. Ministers, Members of Federal & State Parliament and the Lord Mayor, Parramatta
- Acknowledgements
- Vote of Thanks by
  Mr.RajaGopalan, Public Officer, G.O.D Australia

*All are Cordially invited.*

By

**Global Organisation for Divinity Australia**



செப்டம்பர் 27 - பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் திருக்கரங்களால் கோவிந்தபுரம் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் பாதுகா மண்டபம் திறப்பு, மூர்த்தி ப்ரதிஷ்டை

திருநின்றவூர் விவேகானந்தா பள்ளி வளாகம்
14.10 - 21.10.2015 ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் - முரளிஜி








அமெரிக்காவில் ராமானுஜம்ஜி சத்சங்கங்கள்
அக்டோபர் 10-15 டெட்ராய்ட்டில் பக்த விஜயம்




அக்டோபர் 22-27 போஸ்டன் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம், ராதா கல்யாணம்

Program on Anger Management - on behalf of Love to Share Foundation America at Bcston - Ramanujamji





கோவிந்தபுரம் சைதன்யகுடீரம் ப்ரதிஷ்டா தினத்தன்று
நகர கீர்த்தனம் செப்டம்பர் 27

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 நவம்பர் 2015 கானம்: 4

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-236 | 05 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 10 |
| பாகவத பழம்- ஸ்க 2/30 | 11 |
| சாதனையும் முக்தியும் | 13 |
| ப்ரஹ்ம ஸ்வரூபம் | 15 |
| யதார்த்தம் | 24 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 26 |
| சனாதன கோஸ்வாமி | 28 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 31 |
| ப்ருந்தாவன கண்ணன் | 35 |

சூரோபி தீரோபி வனே ஸுமேப்யோ
ந சக்னுயாத் தன் மது சங்க்ரஹீதும்
மாஹாத்ம்யமேவம் நனு ராதிகாயா
வேத்தும் ந சக்னோதி விஷாரதோபி

சூரனாக இருந்தாலும், தீரனாக இருந்தாலும், காட்டில் புஷ்பங்களை கசக்கி, தேன் எடுக்க முடியாது. அதுபோல் மஹாபண்டிதனாக இருந்தாலும், ஸ்ரீராதையின் மாஹாத்மியத்தை கல்வித்திறமையால் அறிந்துவிட முடியாது.

- ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின்
ராதிகா விலாஸ சம்பூ (திருதிய உல்லாசம் - 25)

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: லதாங்கி                                        தாளம்: ஜம்பா

### பல்லவி

ஒருநொடி நின் திருவடி நிழலில் நான் நின்றிட கோடி
பிறவிகளின் புண்யம் வேண்டும் - வேங்கடவா
(ஒருநொடி ..)

### அனுபல்லவி

அடி மூன்று அன்று வலிய வந்து கேட்டு - ஒரு
நொடியில் ஓங்கி உலகளந்த உத்தமனே
(ஒருநொடி..)

### சரணம்

அடிக்கீழ் புகலின்றி அமர்ந்து புகுந்து
படியாகி பவழ வாய் கண்டார் ஆழ்வாரே
மடி மீது ஏறி அமர்ந்தான் ப்ரஹ்லாதனே
வடிவழக நம்பியே உன்னையே சரண் புகுந்தேன்
(ஒருநொடி..)

பின் அட்டை :
சென்னை ப்ரேமிகபவனம்
ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள்
அவதார தின உற்சவம்,
புரட்டாசி சிரவணம்.
செப்டம்பர் 24, 2015



# மதுரமான மஹனீயர் - 236

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில் நவராத்திரி உற்சவ காலம்; ஒன்பது நாட்களும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆஸ்ரமத்திலேயே தங்கி மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின் நவராத்திரி உற்சவத்தை வெகு விமரிசையாக கொண்டாடினார்கள். தினமும் காலையில் ஸ்ரீமத் ராமாயண பாராயணம், பூஜை நடைபெற்றது. மாலையில் வித விதமான சுகந்த மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீப்ரேமிக வரதனையும் மாதுரிஸகியையும் எழுந்தருள செய்து, ராதிகா ஸதக பஜனை செய்தார்கள். இந்த ஒன்பது நாட்களுமே ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீராதாராணியின் தியானமாகவே இருந்தார்கள். ராதாராணியின் க்ருஷ்ணப்ரேமையை பற்றி எப்பொழுதும் நினைத்தவாறும், அதை பற்றியே பேசியவாறும் இருந்து வந்தார்கள். ஒருநாள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அவரது குடீரான மதுவனத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ராதாராணி விஷயமாக, தன் ஹிருதயத்தில் தோன்றிய ஒரு மிக அழகான **பா**வத்தை வெளிப்படுத்தினார்கள்.

ப்ருந்தாவனத்தில் ஓர் இரவு. பூர்ண சந்திரன் தனது குளிர்ந்த ஒளி கிரணங்களை, ப்ருந்தாவனம் எங்கும் பரப்பி கொண்டிருந்தான். மெல்லிய தென்றல் காற்று வீசிக் கொண்டிருந்தது. பச்சை பசேலென்ற மரம், செடி, கொடிகள் நிறைந்த அந்த ரம்யமான ப்ருந்தாவனத்தில், யமுனை கரை அருகில், ராதையும் அவளுடைய சகிகளான கோபிகைகளும் அமர்ந்து புலம்பி கொண்டு (பிரலாபம்) இருந்தார்கள்.

ராதாராணியின் புலம்பல் எதை பற்றி இருக்க போகிறது? 'தவகதாம்ருதம் தப்த ஜீவனம்' என்று கோபிகா கீதத்தில் சொல்லி இருப்பது போல், ஸ்ரீகிருஷ்ணனை பற்றியே பேசிக்கொண்டும் புலம்பிக்கொண்டும் இருந்தார்கள். காற்றில்

அசையும் பகவானுடைய அழகான மயில் பீலி, எல்லோருடைய மனதையும் கொள்ளை கொள்ளும் அவனுடைய வேணு கானம், கால்களை மாற்றி வைத்துக் கொண்டு கோடி மன்மத மன்மதனாய் அவன் நிற்கக்கூடிய அழகு என்று அவனை பற்றியே பேசிக்கொண்டும், "இப்படி நம்மை எல்லாம் தவிக்க விட்டு அவன் சென்று விட்டானே" என்று அவனுடைய பிரிவை தாங்க முடியாமல் புலம்பி கொண்டும் இருந்தார்கள்.

அப்பொழுது திடீரென்று ராதாராணியை காணவில்லை. சகிகளுள் முக்கியமானவர்களான லலிதாவும் சந்திராவளியும், மற்றவர்களுடன் சேர்ந்து செய்வதறியாது திகைத்து நின்றார்கள். பகவானை காணவில்லையே என்ற தவிப்பு போய், ராதையை காணவில்லையே என்ற கவலை, அனைத்து கோபிகளையும் பற்றி கொண்டது. எல்லோரும் ராதையை தேட ஆரம்பித்தார்கள்.

ராதையினால் கிருஷ்ண விரஹத்தை தாங்கவே முடியாது. கிருஷ்ண விரஹத்தால் ஒருவேளை பிராணனும் பிரிந்து விடலாம். ராதாராணி தன் நிலை அறியாது, அருகில் ஓடக்கூடிய யமுனையில் விழவும் நேரிடலாம் என்றவாறு, எல்லோரும் நாலா பக்கத்திலும் ராதாராணியை தேடி அலைந்தார்கள். இந்த அடர்ந்த காட்டில், இரவு பொழுதில் பெண்மணிகளான கோபிகைகள் என்னதான் செய்வார்கள்?

அப்படித்தான் தேடியவாறே, ஒரு மரத்தின் அருகே வந்தார்கள். அப்பொழுது ஒரு கோபி, "என்ன ஆச்சரியம்! இந்த மரத்தின் இலைகளை பார்த்தாயா! அதிலிருந்து பனித்துளிகள் சொட்டு சொட்டாக கீழே விழுகின்றதே! பொதுவாக பனித்துளிகள் அதிகாலை வேளையில்தானே வரும்? இரவு பொழுதில் எப்படி வருகிறது?" என்று வியந்தாள். மற்றொரு கோபி அவளிடம், "உனக்கு புரியவில்லையா? இது பனித்துளி அல்ல. ராதை இங்குதான் மிக அருகாமையில் இருக்க வேண்டும். கிருஷ்ண விரஹத்தை தாங்க முடியாமல், ராதை கண்ணீர் விடுகிறாள். அதுவே இந்த மர இலைகளில் பனித்துளிகள் போல் வெளிப்படுகின்றன" என்றாள். ராதையை எப்படியும் சீக்கிரம் கண்டுபிடித்து விடலாம் என்று மேலே தொடர்ந்தார்கள்.

அப்பொழுது பூமி திடீரென்று நடுங்க ஆரம்பித்தது. ஒரு கோபி, பூமி அதிர்வதை பார்த்தால் ஏதோ பூகம்பம் வந்து விட்டது போல் அலறினாள். எல்லோருக்கும் ஒரு அச்சம் ஏற்பட்டது. இதற்கு காரணம் என்ன என்று ஒரு கோபி வினவ, விவரம் அறிந்த மற்றொரு சகி சொன்னாள், "கிருஷ்ணனை நினைத்து நினைத்து ஏங்கி கொண்டிருக்கும் ராதையின் உடலில் ஏற்படும் நடுக்கமே, இதற்கு காரணமாக இருக்கும்" என்று விளக்கினாள்.

அங்கே சுற்றி திரிந்து தேடி கொண்டிருந்த சகிகள், மற்றொரு ஆச்சரியத்தையும் கண்டனர். ஓரிடத்தில் மரங்களில் இருந்து எல்லாம், பூக்கள் கீழே கொட்டி கொண்டிருந்தன. யார் இப்படி செய்தார்கள்? கூட்டமாக குரங்குகள் மரக்கிளைகளில் அமர்ந்து இவ்வாறு செய்கின்றனவோ என்று சந்தேகத்துடன் பார்த்தார்கள். அங்ஙனம் தேடிப்பார்த்த அவர்களுக்கு, எந்த குரங்கும் அவ்வாறு செய்யவில்லை என்று புரிந்தது. 'கிருஷ்ணனின் பிரிவை தாங்காது ராதை மூர்ச்சையாகி கீழே விழுந்திருப்பாள்; அதனாலேயே இந்த பூக்களும் விழுகின்றன' என்று அவர்கள் ஊகித்தனர். "அப்படி என்றால் இங்குதான் அருகாமையில் எங்கோ இருப்பாள்; கண்டுபிடித்து விடலாம்" என்று நம்பிக்கை கொண்டனர்.

அப்பொழுது திடீரென்று மிக குளிர்ந்த தென்றல் வீசிய அந்த இரவு பொழுது மாறி, அக்னி நக்ஷத்திரம் போல் வெப்ப அலை அடித்தது. தென்றல் காற்று மாறி, பலத்த புயல் போல் காற்று வீச துவங்கியது. அந்த ப்ருந்தாவனத்தில் காட்டுத்தீ ஏற்பட்டு விட்டதோ? அதோடு கூட புயலும் சேர்ந்து விட்டதோ என்று சகிகள் நினைத்து அஞ்சினார்கள்.

அப்பொழுது சந்திராவளியும் லலிதாவும் மற்றவர்களிடம், "தோழிகளே கவலை வேண்டாம். ஏன் தெரியுமா? காட்டுத்தீயோ, புயலோ வந்து விடவில்லை. ராதை எங்கோ மிக அருகில்தான் இருக்கின்றாள். கிருஷ்ண விரஹத்தால் தவிக்கும் அவள் உடலில் இருந்துதான் இந்த வெப்பம் கிளம்பி உள்ளது. 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று அவள் தீர்க்க சுவாசம் விடுவதுதான், புயலாக பிரதிபலிக்கிறது" என்று சொன்னார்கள்.

அப்பொழுது அவர்கள் இதுவரை கனவிலும் கண்டிராத ஒரு காட்சியை காண நேர்ந்தது. இரவு பொழுதில், திடீரென்று நீல வானம், கைகளால் தொட்டு விடும் அருகாமையில் வந்து அவர்களை சூழ்ந்து கொண்டது. கோபிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன இது மாயாஜாலம்! இருள் படர்ந்த இந்த இரவு நேரத்தில் நீல வானம் தரையிறங்கி விட்டதோ! இப்படி ஒரு காட்சியை நாம் கண்டதுமில்லை. யார் சொல்லி கேள்விப்பட்டதுமில்லை" என்று குழப்பமடைந்தனர்.

அப்பொழுது, "அதோ பார்! நீல வர்ணத்திற்கு நடுவில் ராதை அமர்ந்திருப்பது தெரிகிறதா" என்று சந்திராவளி சொல்ல, அனைவரும் ராதையை நோக்கி ஓடினர். ராதையை சுற்றி சூழ்ந்து கொண்ட சகிகளுக்கு, அப்பொழுது நீல நிறத்தின் ரகசியம் புரிந்தது. நீல மேக சியாம சுந்தரனான பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் தியானத்தில் முழுமையாக ஆழ்ந்து விட்ட ராதையின் ஹிருதயத்தில் இருந்துதான், கிருஷ்ணனின் வர்ணம் இந்த பிரபஞ்சம் முழுவதும் பிரதிபலித்து கொண்டிருக்கிறது என்று புரிந்தது.

அப்பாடா! ராதையை கண்டு கொண்டு விட்டோம் என்று அவர்களிடையே ஒரு மகிழ்ச்சி களிப்பு! இப்பேர்ப்பட்ட ஒரு உன்னத நிலையில் நம் ராதை இருக்கிறாளே என்ற வியப்பு, அனைவரிடமும் காணப்பட்டது. மற்றொரு புறம் கிருஷ்ணனை பிரிந்து ராதை படும் அவஸ்தையை, அவர்களால் ஒரு துளி கூட சகித்து கொள்ள முடியவில்லை.

ராதையின் பிராணன் கிருஷ்ணன். ஆனால் சகிகளின் பிராணனோ ராதாராணி. இந்த விரஹ தாபத்தினால், ராதை தவிப்பதை கோபிகைகளால் தாங்க முடியவில்லை. ராதையை இந்த அவஸ்தையிலிருந்து எப்படி காப்பாற்றுவது என்று தங்களுக்குள் பேசி கொண்டனர்.

யாருக்கும் ராதையின் மிக அருகில் செல்லவோ, அவளை சென்று தொடவோ தைரியம் வரவில்லை. ராதையை சுற்றி ஒரு வட்டம் போல் நின்று கொண்டிருந்தார்கள்.

ஒரு சகி சொல்கிறாள், "ராதையை இந்த அவஸ்தையிலிருந்து உடனே காப்பாற்றியாக வேண்டும். என்னால் கொஞ்சம் கூட, அவள் படும் பாட்டை பார்த்து

கொண்டு சும்மா இருக்க முடியவில்லை" என்றாள்.

"ஒன்று கிருஷ்ணன் வந்து விட்டால், நொடியில் அவள் தாபம் போய் விடும். அல்லது ஏதாவது செய்து அவளை சகஜ நிலைக்கு கொண்டு வர வேண்டும். அவள் இருப்பதோ உயர்ந்த பக்தி நிலையில். எனக்கோ கிருஷ்ண பக்தி துளி கூட இல்லை. வறண்ட என் ஹிருதயத்தில் கிருஷ்ண பக்தி துளிர்க்காதா என்று ஏங்கி கொண்டிருக்கின்றேன். அதனால், நான் போய் இப்பொழுது ராதாராணியை தொட்டால் கண்டிப்பாக அவள் இருக்க கூடிய உன்னத நிலையில் இருந்து, சகஜ நிலைக்கு வந்து விடுவாள்" என்று சொல்லி ஓடி போய் ராதையை கட்டிக்கொண்டாள்.

எல்லோரும் ராதை தன் நிலையில் இருந்து இறங்கி விடுவாள் என்று நினைக்க, ஆனால், நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று என்றாகி விட்டது. ராதையின் நிலை இன்னும் உச்சத்திற்கு சென்று விட்டது. கிருஷ்ண பக்திக்கு இலக்கணமாய் திகழும் கோபிகைகள், என்றுமே தங்களிடம் உள்ள கிருஷ்ண பக்தி போதவே இல்லை என்றுதான் நினைத்து கொண்டிருப்பார்கள். அப்படித்தான், உத்தம கிருஷ்ண பக்தையான அந்த சகியும், தன்னை பற்றி நினைத்து கொண்டிருந்தாள். தன்னிடத்தில் எவ்வளவு பக்தி இருந்தாலும், தனக்கு பக்தியே இல்லை என்று நினைப்பதுதானே உண்மையான பக்தனின் அடையாளம்.

இது ஒருபுறமிருக்கட்டும். அந்த கோபியின் நிலை, என்ன ஆகி விட்டது தெரியுமா? ராதையின் ஸ்பரிசம், அந்த சகியையும் ஒரு ராதையாகவே மாற்றி விட்டிருந்தது.

சீடன், ஒருநாள் தன் குருநாதரை தரிசனம் செய்ய சென்றான். அப்பொழுது அவனுக்குள் ஒரு எண்ணம். என்ன அது? 'நாம் எவ்வளவு பக்தியுடன் உள்ளோம். அதை பார்த்து குருநாதர் வியப்படைவார்' என்று. அப்படி நினைத்த உடன், அவனை பார்த்து ஒரு சிரிப்பு மட்டுமே சிரித்தார். அதன் பொருள் என்ன? 'முட்டாள் சீடனே! அந்த பக்தியே உனக்கு நான் கொடுத்ததுதான்' என்பதே!

\- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் பலன்களுக்கு முயற்சி(பௌருஷம்) காரணமா அல்லது விதி(தெய்வம்) காரணமா?**

பதில்: வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் பலன்களுக்கு, சிலர் தீவிரமாக முயற்சி மட்டுமே காரணம் என்கிறார்கள். வேறு சிலரோ, அப்படியில்லை; நாம் சில விஷயங்களில் முயற்சி எடுத்தும் பலன் கிடைக்கவில்லையே? ஆதலால், பலன்களுக்கு முயற்சி காரணமில்லை; விதிதான் அதாவது தெய்வம்தான் காரணம் என்று சொல்கிறார்கள். வேறு சிலரோ நமது முயற்சியும் விதியும் சேர்ந்து பலனை தருகின்றன என்கிறார்கள். ஏனென்றால், முயற்சியே எடுக்கவில்லை என்றால், பலன் ஏற்படுகின்றதா என்று கேட்கின்றனர்.

அப்படி இல்லை; நம் உடலுக்கு ஏதோ ஒரு நோய் வருகின்றது; நோய் வருவதற்கு நாம் ஏதாவது முயற்சியா எடுக்கிறோம்? அது நாம் வேண்டாம் என்றாலும், வருகின்றதே; ஆதலால் பலன் வருவதற்கு விதிதான் காரணம் என்பாரும் உண்டு.

ஆனால், விதி என்றால் என்ன, தெய்வம் என்றால் என்ன என்பதை சரியாக புரிந்து கொண்டால், இந்த கேள்விக்கு தெளிவான ஒரு விடையை பார்க்க முடியும். நாம் முற்பிறவிகளில் செய்த வினைகளின் தொகுப்புதான் இப்பிறவியில் நமக்கு பலனை தருகிறது. அதையே விதி என்கிறோம். ஆக, நேற்றைய பௌருஷம் (முயற்சி), இன்றைய விதி ஆகிறது. அதுபோல், இன்று நாம் செய்யும் முயற்சிகள், நாளை நமக்கு நிச்சயமாக பலன் தர இருக்கையில், அதை விதி அல்லது தெய்வம் என்று குறிப்பிடுகின்றோம். ஆகவே நேற்றைய பௌருஷம், இன்றைய விதி; இன்றைய பௌருஷம், நாளைய விதி ஆகிறது.



# பாகவத பழம்

**ஸ்கந்தம் 2, அத்யாயம் 10**

–ஸ்ரீ ஸ்வாமிஜி (30)

சென்ற இதழ் தொடர்ச்சி ... "நடக்க விரும்பிய அவருக்கு (விராட்புருஷனுக்கு), இரண்டு கால்கள் முளைத்தன. அதற்கு விஷ்ணுதான் அதிஷ்டான தேவதை. சந்ததியை விரும்பிய அவருக்கு ஞானம் உண்டாயிற்று. அதில் உபஸ்தம் என்ற இந்திரியமும், ப்ராஜாபதி என்ற தேவதையும் உண்டாயின. சாரமற்றதை வெளியேற்ற விருப்பம் கொண்ட அவருக்கு, குதம் உண்டாயிற்று. அதில் பாயு என்ற இந்திரியமும், மித்ரன் என்ற தேவதையும் உண்டாயிற்று. வெளியேற்றுதல் என்ற விஷயமும் உண்டாயிற்று".

"ஒரு தேஹத்திலிருந்து மற்றொரு தேஹத்தை அடைய விரும்பிய அவருக்கு, நாபி த்வாரம் உண்டாயிற்று. அதில் அபானன் என்ற இந்திரியமும், ம்ருத்யு என்ற தேவதையும் உண்டாயிற்று. அவ்விரண்டையும் ஆசிரயித்த மரணமும் உண்டாயிற்று".

"சிந்திக்க விரும்பிய அவருக்கு ஹ்ருதயமும், அதில் மனஸ் என்ற இந்திரியமும், சந்திரன் என்ற தேவதையும் உண்டாயின. சங்கல்பமும் காமமும் இதிலேயே உண்டாயின. பூமி, ஜலம், தேஜஸ் இவைகளின் கார்யங்களே, மேல் தோல், அடி தோல், மாமிசம், ரத்தம், மேதஸ், மஜ்ஜை, எலும்பு என்ற ஏழு தாதுக்கள். பிராணனோ ஆகாசம், ஜலம், வாயு இவைகளால் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு, பூமி முதலிய எட்டு ஆவரணங்களால் (பஞ்ச மஹாபூதங்கள், மஹத், அஹங்காரம், மூல பிரக்ருதி) வெளியில் மறைக்கப்பட்டதான, இந்த பகவானின் ஸ்தூல ரூபம் கூறப்பட்டது. அதற்குக் காரணமான சூக்ஷ்ம சரீரமானது, நாம ரூபமற்றது. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது. ஆனால், இவ்விரண்டுமே மாயையால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்பதால், ஞானிகள் இவற்றை அங்கீகரிப்பதே இல்லை.

நடக்கக்கூடிய மற்றும் அசைவற்ற எல்லா ஜீவன்களும், ஜல, ஸ்தல, ஆகாசத்தில் வசிக்கும் அனைத்தும், முட்டையிலிருந்தோ, வேர்வையிலிருந்தோ, பூமியிலிருந்தோ தோன்றும் அனைத்து பிராணிகளும், அதன் அதன் புண்ய, பாப கர்ம வினைப்பயன்களின்படி தோன்றுபவையே! ஸத்வ, ரஜஸ் மற்றும் தமோ குணங்களின் மேலீட்டால், தேவகதி, மனிதகதி மற்றும் நரககதி என்று மூன்று கதிகள் உண்டு".

"உலகங்களை சிருஷ்டித்த அந்த பகவானே விஷ்ணு ரூபத்தை தரித்து, இந்த பிரபஞ்சம் முழுவதையும் வராஹம் முதலிய மிருக அவதாரங்களாலும், ராம க்ருஷ்ணாதி மனுஷ்ய அவதாரங்களாலும், வாமனாதி தேவாவதாரங்களாலும் நிலைத்திருக்க செய்து கொண்டு காத்து வருகிறார். அவரே பிரளயத்தில் இதை சம்ஹாரமும் செய்கிறார். சர்வ சக்தி பொருந்திய பகவான், இவ்வாறு சிருஷ்டி, ஸ்திதி, லயம் முதலியவற்றைச் செய்யும் ரூபத்துடன் கூறப்பட்டார். ஆனால், விவேகிகளோ அவரை இவ்வாறு மட்டும்தான் உள்ளார் என்று புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில், அவர் எல்லா வர்ணனைகளுக்கும் அப்பாற்பட்டவர். இவை அனைத்தும் அவர்மேல் மாயையினால் ஆரோபிக்கப்பட்டவையே. மஹாகல்பமும், அவாந்தர கல்பங்களும் சுருக்கமாக கூறப்பட்டது. மேலும், பாத்மகல்பத்தை கூறுகிறேன், அரசே! கேட்பீராக!"

இவ்வாறு சுகர் கூறினார் என்று ஸூதர் சொன்னதும், சௌனகர் ஸூதரைப் பார்த்து கேட்கலானார்.

"விடமுடியாத பந்துக்களை விட்டு, விதுரர் தீர்த்த யாத்திரைக்குச் சென்றார் என்று தாங்கள் கூறினீர்கள். அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் ஆத்மதத்துவ சம்பந்தமான சம்வாதம் எங்கே நடந்தது? விதுரருக்கு, மைத்ரேயர் என்ன தத்துவோபதேசம் செய்தார்? எந்த காரணத்தால், விதுரர் பந்துக்களை விட்டுச் சென்றார்? எக்காரணம் கொண்டு மீண்டும் திரும்பினார்? இவை அனைத்தையும் எங்களுக்கு கூறுவீராக".

ஸூதர் இதற்கு பதில் உரைக்கையில், "பரீக்ஷித் ராஜாவும் இந்த கேள்வியையே சுகரிடம் கேட்டார். அதற்கு சுகர் கூறிய பதிலையே நானும் உங்களுக்குக் கூறுகின்றேன்" என்றார்.

(கனியும்)

# சாதனையும் முக்தியும்

- ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து
சௌ.ஜனனி குமாரஸ்வாமி

நாம் பல மஹான்களின் சரித்திரத்தை படிக்கின்றோம்; கேள்விப்படுகின்றோம். அவர்களின் சரித்திரத்தை கேட்கும்பொழுது, பொதுவாக நாம், அவர்கள் இந்த ஒரு ஜன்மத்திலேயே ஆன்மீகத்தின் உச்சியை அடைந்து விட்டதாக எண்ணுகிறோம். ஆனால் அது உண்மையல்ல. உதாரணத்திற்கு, ரமண மஹரிஷிகள் சில மணி துளிகளுக்குள் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்துவிட்டதை, அவர் சரித்திரத்திலிருந்து நாம் அறிகிறோம். இந்த ஜன்மத்தில், சில நிமிடங்களுக்குள், அவர் ஸாக்ஷாத்காரம் அடைந்துவிட்டதாக தோன்றியபோதிலும், ரமண மஹரிஷிகளே, தான் முற்பிறவிகளில் சாதனைகள் செய்துள்ளதாக தானே கூறுகிறாரே? ஆக, ஒரே ஜன்மத்தில் பகவத் ஸாக்ஷாத்காரம் ஏற்படுவது என்பது சாத்தியமல்ல.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனே, 'அநேக ஜன்ம ஸம்ஸித்த: ததோ யாதி பராம் கதிம்' என்று கீதையில் கூறுகிறார். பல ஜன்மங்களில் செய்யும் சாதனைக்கு பிறகே, ஒருவன் அந்த பராகதியை அடைகிறான். அப்படிப்பட்ட திடமான சாதனையை, கலியுகத்தில் ஒருவரால் செய்யவே முடியாது. இதற்கு முன் யுகங்களில் கூட, ஜடபரதர் போன்ற மஹாதபஸ்விக்கும் கூட, மூன்று ஜன்மங்களின் முடிவில்தான், மோக்ஷம் கிடைத்தது.

கலிகாலமோ எவ்வித தவம் செய்வதற்கும் ப்ரதிகூலமாகவே உள்ளது. கலியின் தோஷங்களையும் அதிலுள்ள இந்த்ரிய ஸுகமான விஷயங்களையும் மீறி, ஒருவர் ஆன்மீக ஸாதனை புரிவதே மிக மிக கடினம். பின், அதே ஜன்மத்தில் ஸாதனையினால் மோக்ஷமடைவது என்பது முடியவே முடியாத ஒன்று என்றே கூறவேண்டி இருக்கிறது.

கலியில், நாடுகளுக்கிடையே பரஸ்பர கலஹம் மற்றும் போர், பஞ்சம், புயல், வெள்ளம், வியாதி என்று பலவிதமாக மனிதன் அலைக்கழிக்கப்படுகிறான். இவற்றுள் ஏதாவது ஒன்றினால் அவதிக்குள்ளானால் கூட, அந்த ப்ரச்சனையிலிருந்து எப்படி வெளியே வருவது என்பதே

ஒருவரின் சிந்தனையை ஆட்கொள்ளும். அப்படியிருக்க அச்சமயங்களில் அவர்களின் மனம் ஆன்மீகத்தை நாட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா?

இதுபோன்ற விஷயங்களால் பீடிக்கப்படாத ஒருவன் ஸாதனையில் ஈடுபட்டாலும், அவனுக்கும்தான் எத்தனை கவலைகள், எண்ணச் சிதறல்கள். ஆக, இந்த யுகத்தில் தவம் போன்ற ஆன்மீக ஸாதனைகளால், இதே ஜன்மத்தில் மோக்ஷம் அடைவதென்பது துர்லபம். அப்படி எனில், ஒருவனுக்கு கதிதான் என்ன? என்று கேட்டால், குருநாதன் சரணம்தான் கதி என்பதே பதில்.

பல கோடி பிறவிகள் எடுத்த ஜீவன், தன் கடைசி ஜன்மத்திலேதான், ஒரு ஸத்குருநாதரிடம் வருகிறான். அந்த ஜீவன், பல பிறவிகளில் செய்த ஸாதனத்திற்கு பலனாகவே அவனை, பகவான் ஒரு ஸத்குருநாதரிடம் அனுப்பி வைக்கின்றார்.

உண்மையில், அவதார புருஷர்கள் மட்டுமே ஒரே ஜன்மத்தில் ஆன்மீகத்தின் உயரங்களுக்கு செல்கிறார்கள்.

ஒரு வீட்டில் திருடன் புகுந்து கொண்டு, சொந்தக்காரரை வீட்டில் உள்ள பணம், தங்கம் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை கேட்டு மிரட்டினான். வீட்டு சொந்தக்காரன் முட்டாளாக இருந்தால், அவைகளை தர மறுத்து, அதனால் திருடர்களால் கொல்லப்பட்டு, உயிர் துறப்பான். அவனே போன பின், பொருட்களால் அவனுக்கு ஆக போவது என்ன? அறிவாளியாக இருந்தால், ‘எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்; ஆளை விடு’ என்று உயிரைக் காப்பாற்றி கொள்வான். அதுபோல், ‘என் சரீரம், பிராணன், மனது, அறிவு போன்றவைகளுக்கு என்ன நாசம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; என்னுடைய ஆத்மாவை காப்பாற்று’ என்று பகவானிடம் பிரார்த்திக்க வேண்டும்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# ப்ரஹ்ம ஸ்வரூபம்

ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள்
1939ஆம் ஆண்டில் ஆற்றிய அருளுரை

ஜனங்கள், ஸ்ரேயஸ் - மோக்ஷம் ஆகிய இரண்டையும் அடைவதற்கு ஸ்ரீபகவத்பாதர்கள், அநேக அரிய க்ரந்தங்களையும், உபதேசிப்பதற்கு சிஷ்யர்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர்களின் உபதேசங்களை அனுஷ்டிப்பதனால், நற்கதி பெறுவது நிச்சயம்.

முக்கியமாக, ஒவ்வொருத்தருக்கும் சரீரம் என்பது அனாதி காலமாக வந்து கொண்டே இருக்கிறது. எண்ணத்தின் மேல் எண்ணம் தோன்றிக்கொண்டே இருக்கின்றது. எண்ணங்கள் நல்லதாக இருக்குமானால், புண்ணியம் உண்டாகிறது. கெடுதலானால் பாவம் சம்பவிக்கிறது. நல்ல எண்ணங்கள் உண்டாவது மிகவும் சிரமம். தீய எண்ணங்கள்தான் அதிகம். அதனால், காமக்குரோதாதிகள் அதிகரிக்கின்றன. சம்சார பந்தத்தில் கட்டு உண்டாகிறது. எனவே, பாவம் மூட்டை மூட்டையாக சேருகிறது. சரீரம் நம்முடையது என்ற அகங்காரமும் மேலிடுகிறது. பார்ப்பதை எல்லாம் நிஜம் என்று நினைக்கிறோம். தன் மூல காரணத்தை அறிய புகுந்தால் பொய் என்று தோன்றும். ஜீவன் முக்த நிலை என்று ஒரு நிலை இருக்கின்றது. அதுதான் உண்மை என்று சொன்னால், அது பொய்யாக தோன்றுகிறது. உண்மையில் அதுதான் உண்மை.

ஒவ்வொரு சரீரத்திலும் பரமாத்மாவின் அணு, அதாவது அம்சம் இருந்து வருகின்றது. அதைப் பார்க்க விடாமல், மனம் தடைப்படுத்துகிறது. இந்திரியங்களின் போக்குக்கு மனம்தான் பொறுப்பாளி. எண்ணங்களுக்கு (சங்கல்பம்) இருப்பிடம் அதுதான். மனோலயம் ஏற்பட்டால், (சங்கல்பம் வேருடன் அகன்றால்) ஆத்ம ப்ரகாசம் ஏற்படுகிறது. கண்ணாடியில் நம் உருவத்தை பார்க்கிறோம். கண்ணாடியை எடுத்து விட்டால், தோன்றிய உருவம் இல்லை. கண்ணாடி போன்ற மனம் நசித்தால், திவ்ய அம்சம் தன்மயமாக ப்ரகாசிக்கின்றது. ஜீவனிடத்தில், ஈஸ்வரனின் சக்தி விசேஷங்கள் தோன்றக்கூடும். எப்படி என்றால், கண்ணாடியில் பிரதிபிம்பிக்கிற சூரியனின் பிரகாசம், கிருஹத்துக்குள் விழும் காலத்தில் பிரதிபிம்ப

சூரியனிடத்திலும், எப்படி பிரகாசம் காணப்படுகிறதோ அதேமாதிரி பிரதிபிம்பத்தினிடத்திலும், பிம்பத்திலுள்ள குணங்கள் ஏற்படும் என்பதில் ஆக்ஷேபம் இல்லை.

பல கண்ணாடிகளை வைத்துக்கொண்டு, நாம் சூரியனை பார்க்கிறோம். அப்பொழுது, எல்லா கண்ணாடிகளிலும் சூரியன் தெரிகிறான். கண்ணாடிகளை எடுத்து விட்டால், தெரிவது ஒரு சூரியன்தான். அதேபோல், பரமாத்மா ஒருவர்தாம். பல கண்ணாடிகளில் பல சூரியர்கள் தெரிவது போல், பரமாத்ம ஸ்வரூபம், பல ஜீவராசிகளினிடத்தும் வியாபித்திருக்கின்றது.

வியாதி வந்தவன், மருந்து சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றான். ஆனால் குணம் தெரியவில்லை. ஏன்? மூல காரணத்தை அவன் அறியவில்லை. அறிந்து விட்டால், வியாதி போய் விடுகிறது. மருந்து தேவையில்லை. பத்தியமாக இருந்தால் நோய் இல்லை. பத்தியமாக இல்லாமலிருப்பது நோய்க்கு மூல காரணம். இந்த சரீரமாகிய நோய் எப்படி வந்தது? அதன் மூல காரணம் என்ன, அது மறுபடியும் உண்டாகாமலிருக்க என்ன செய்து கொள்ள வேண்டும் என்று, நாம் ஆராய வேண்டும். அதை ஆராய்ந்து, அதை போக்க வழி இருக்கிறது. நோயை தடைப்படுத்துவதற்கு பத்தியமாக இருப்பது போல், கர்மாக்களை சரிவர செய்ய வேண்டும்; ஈஸ்வரார்ப்பணமாக செய்ய வேண்டும். உபநிஷத்துக்கள், ஸ்ருதிஸ்ம்ருதிகள், புராணங்கள் இவற்றை படித்தோ, சிரவணம் செய்தோ, அவற்றில் சொல்லியுள்ளபடி நடக்க வேண்டும். எப்பொழுதும் சத்சங்கங்களில் இருந்து வர வேண்டும். ஈஸ்வர தரிசனம் செய்ய வேண்டும். எப்பொழுதும், பகவத் தியானம் செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்ல குருவை அடைய வேண்டும். இவற்றால், சித்த சுத்தி ஏற ஏற, சங்கல்பம் அறுபடும். மனம் நாளடைவில் நசிக்கும். முடிவில் பரமாத்ம ஸ்வரூபம் ப்ரகாசிக்கும். அதுதான் ஜீவன் முக்த நிலை. அந்த நிலையில், எப்படி வெள்ளரி பழம் பழுத்தவுடன், காம்பு விடுபட்டு தனியாக போய் விடுகின்றதோ, அப்படியே ஆசாபாசங்களையுடைய பந்தம் தானாகவே விலகுகிறது.

பிரம்மச்சாரி குருகுலவாசம் செய்து, அலவணமாக (உப்பின்றி) ஆகாரம் செய்து கொண்டு, வேதாத்தியாயனம் செய்ய வேண்டும். கிரஹஸ்த தர்மத்தில், சம்சார அலுவல்களை

சாத்தியமான வரையில் குறைத்து கொண்டு அலுவல் நேரம், தூங்கும் நேரம் போக மற்ற நேரங்களில் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிய வேண்டி, தியானித்து கொண்டே இருக்க வேண்டும். கர்மாக்களையும் ஈஸ்வர ப்ரீதியாக செய்து வரவேண்டும். சங்கல்பங்கள் உண்டாகாத வண்ணம் செய்து வரவேண்டும். இதனால் மரண சமயத்தில், மனம் கலங்காதிருக்கும். அதிக காற்றோட்டமில்லாத இடத்திலுள்ள தீபம் எப்படி அசைவற்றிருக்குமோ, அப்படி மனம் அசைவற்றிருக்கும். மரண சமயத்தில், சரீரத்தில் வலி அதிகமாக இருக்கும். அதனுடன் சரீர அபிமானமும் அதிகம். பாபிகளுக்கு மனம் அப்பொழுது கலங்கி இருக்கும். அந்த சமயத்திலுள்ள மனோபாவத்துக்கு தகுந்தபடி, மறுபிறப்பு உண்டாகிறது. மனோலயம் வந்தவன், மரண சமயத்தில் தீரத்துடன் இருப்பான். நாம் எவ்வளவோ பாபங்கள் செய்திருக்கிறோம். நாம் சிரத்தையுடன், கர்மாக்களையும், பகவத் த்யானத்தையும் செய்து வந்தால், இந்த ஜன்மத்திலேயே கடைத்தேறலாம்.

சன்யாச ஆஸ்ரமம் உயர்ந்தது. மோக்ஷ நிலையை அடைவதற்கும், அதற்கான கிரந்தங்களை படித்து நடந்து கொள்வதற்கும், அதில்தான் அவகாசம் அதிகம். யதிகளுக்கு கவலைப்பட வேண்டியது ஒன்றுமில்லை. உணவு ஒருவேளை; அதுவும் அலவணத்துடன் செய்ய வேண்டும். யதிகளை ரக்ஷிப்பதற்காக க்ரஹஸ்தர்கள், தங்களுக்காக தயாரிக்கும் போஜன பதார்த்தங்களில் ஒரு பங்கை அவர்களுக்காக வைக்க வேண்டும். சிரத்தையுள்ள யதிகளுக்கு பரமாத்ம ஸ்வரூபம் சுலபத்தில் விளங்கும். யதி ஒவ்வோர் ஊரிலும் மூன்று நாட்களுக்கு மேல் தங்க கூடாது. அப்படி தங்கினால் அந்த கிராமத்தவர்களின் ஆசாபாசங்களில் யதிக்கு சம்பந்தமுண்டாக ஹேது உண்டு. காசி முதலான ஜீவ மோக்ஷபுரிகளில் ஏதேனுமொன்றில் ஆயுள் பர்யந்தம் தங்கியிருப்பதாக யதி தீர்மானித்து கொண்டால், அவ்விதம் செய்து கொள்ளலாம். யதிகளுக்கு முக்கியமானது சாதுர்மாஸ்யம். வியாசர், சுகர் முதலான ரிஷிஸ்ரேஷ்டர்களையும், மற்றுமுள்ள ஆசார்யர்களையும், ஆவாஹனம் செய்து பூஜிப்பதுதான் சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில் செய்யும் வ்யாச பூஜையாகும்.

வ்யாச பூஜை ஆரம்ப தினத்திலிருந்து நான்கு பக்ஷங்கள், ஒரே இடத்தில் இருக்க வேண்டும். யதிகள் வேதக்ரந்தங்களை படித்து மனனம் பண்ண வேண்டும். சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில், ஓர் இடத்தில் பல யதிகள் சேர்ந்தால், அவர்களில் அதிக சாதுர்மாஸ்யங்களை செய்தவர், பூஜை முதலான முக்கிய காரியங்களை செய்ய வேண்டும். மற்ற யதிகள் கூட இருந்தால் போதும். யதிகளின் ப்ரார்த்தனையை அனுசரித்து, சாதுர்மாஸ்ய முழுமைக்கும் அவர்களை ரக்ஷிப்பதாக, கிராமத்தவர்கள் அவர்களுக்கு வாக்குறுதி செய்து கொடுக்க வேண்டும். ப்ரஹ்மத்யானம் எப்பொழுதும் செய்து கொண்டே இருப்பதற்கும், அதன் பலனை அடைவதற்கும், யதி ஆஸ்ரமத்திலுள்ள சௌகர்யம் வேறு எதிலும் இல்லை.

ஆகவே நம்முடைய பரமாசார்யர்கள் அவர்கள், நமக்கு காட்டி இருக்கிற வழிகளை பின்பற்றி, கர்மாக்களை செய்து பகவத் தியானம் மூலம் மனத்தை நசிக்க செய்து, ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிய நம் எல்லோருக்கும் அனுக்ரஹிக்க வேண்டுமென்று, நாம் எல்லோரும் ஸ்ரீசந்திரமௌளீஸ்வரரை ப்ரார்த்திப்போம்.


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

## Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Guru◌ram Consulting Private Ltd

Dr.ஜனனி வாசுதேவன்

மனதை அடக்கி, அதை முற்றிலுமாக அழிப்பதே ஸர்வ ஆன்மீக ஸாதனைகளின் நோக்கமாகும். 'ஸர்வ மனோ நிக்ரஹ லக்ஷணாந்தா: பரோ ஹி யோகோ மனஸ: ஸமாதி:' என்று இதையே ஸ்ரீமத்பாகவதமும் கூறுகிறது. பொதுவாக தன் மீதே வெறுப்பு வந்தால், ஒருவர் தற்கொலை செய்து கொள்வதையும், தனக்கு பிடிக்காத ஒருவன் மீது வெறுப்பு ஏற்பட்டால், கொலை செய்வதையும் பார்க்கிறோம். இதனால் உடல்தான் அழிகின்றது. வெறுப்பிற்கும் துக்கத்திற்கும் காரணமான மனதோ, அப்படியே அழியாமல் இருக்கிறது என்பதை யாரும் உணர்வதில்லை. ஒவ்வொருவருடைய மனதும் ஒரே ஸம்பவத்திற்கு வெவ்வேறு விதமாக **react** செய்வதையும், நாம் பார்க்கின்றோம். இப்படி மனதின் கோணங்களை நம்மால் முழுவதுமாக புரிந்து கொள்வது என்பதே மிகவும் கடினம். அப்படியிருக்க, இதை அடக்குவதோ, அழிப்பதோ எப்படி செய்வது?

மேலும், மனதை அடக்க, முதலில் புலன்களை அடக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால், நம்மாலோ ஒரு வேளை உணவை கூட, ஏனோ-தானோ என்று சாப்பிட முடியாது. 'சுவையான உணவுடன் சுகமான வாழ்க்கையில் மனமடங்குமென்பது உந்தீபற; மடமையேயாகுமென்று உந்தீபற' என்று கலிதர்ம உந்தியாரில் கூறியுள்ளது போல், புலனடக்கமின்றி மனதை அடக்க வேண்டும் என்று எண்ணுவதே மடமையாகும். நாம் வாழும் சூழலும், மனதை பெருமளவிற்கு பாதிக்கின்றதை நாம் உணர்கிறோம். வியாதி, விபத்து, இயற்கை சீற்றம், கலஹங்கள், வன்முறை என்று நம்மை சுற்றியுள்ள இன்னல்களுக்கு கணக்கே இல்லை. கலியில் மனிதனின் ஆயுளும் அல்பம்; இப்படியொரு அவல நிலையில் மனதை எப்படி சலனமின்றி வைத்துக் கொள்வது என்றால் பதில் என்ன? மார்கழி மாதத்தில் ஒருவன் விடியற்காலையில் வெளியில் வந்து நடுங்கும் குளிரிலும் பனியிலும் நின்று கொண்டு 'குளிர் ஒழிக' என்று கத்தினாலோ, அல்லது அக்னி நக்ஷத்திரத்தின் போது உச்சிவேளையில் 'வெயில் ஒழிக' என்று கூச்சலிட்டாலோ, அவனிடம் விவேகமுள்ள ஒருவன் என்ன கூறுவான்? 'அப்பா! இது குளிர்காலம் (அல்லது வெயில்காலம்). இதிலிருந்து நீ கம்பளியை போற்றிக் கொண்டோ, குடையை

பிடித்துக் கொண்டோ, உன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயன்றி, இந்த காலத்தை நிந்திப்பதால், என்ன பயன்?' என்று தானே கூறுவான். அதேபோல்தான், கலிகாலத்தின் அவலங்களை கண்டு நாம் இதை குறை சொல்வதும். இந்த நிலைதான் கலியின் கோலம். இதிலிருந்து நாம் எப்படி பிழைப்பது என்று, நாம்தான், உபாயங்களை கை கொள்ள வேண்டும்.

அந்த உபாயம் என்னவென்றால், பகவானிடம் முற்றிலுமாக சரணடைந்து, ஸதா அவன் நாமங்களை பாடிக் கொண்டிருப்பதுதான். பகவன் நாமங்களை இயந்திரம் போல் சொல்லாமல், ஒரு எண்ணிக்கையை முடிக்க என்றில்லாமல், மனதை நம்மால் அடக்க முடியவில்லை என்ற நமது இயலாமையை, பகவானிடம் தெரிவித்துக் கொண்டே சொல்ல வேண்டும். அப்படி சொல்லி வர, கருணைக் கடலான பகவான் நம்மீது க்ருபையை பொழிவான்.

ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஒருவர், பார்வையை உண்முகமாக திருப்ப வேண்டும் என்கிறார்களே; அதன் பொருள் என்ன? என்று கேட்டார். அப்படி கேள்வி கேட்டவரை, ஸ்ரீஸ்வாமிஜி சிறிது நேரம் பிராணனை அடக்க சொன்னார். அவரும் சில நொடி துளிகள் அடக்கி விட்டு, பிறகு முடியாமல் பிராணனை விட்டு விட்டார். இப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று ஸ்ரீஸ்வாமிஜி கேட்டார்கள். அதற்கு அவர், பிராணன் வெளிப்பட பார்க்கும்பொழுதெல்லாம் அதை உள்ளேயே நிறுத்த முயற்சி செய்தேன். சிறிது நேரத்திற்கு பிறகு முடியவில்லை. பிராணனை விட்டு விட்டேன் என்றார். ஆம்; அப்படித்தான்; நாம் காது, மூக்கு, கண்கள், வாக்கு, ஸ்பரிசம் போன்றவைகளை வெளிப்படும்போதெல்லாம், உள்ளே தள்ள முயற்சித்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் பல பிறவிகளின் பழக்கத்தால் அவைகள் திமிறி, வெளிவர பார்க்கும். விடாமல், உள்ளே திரும்ப திரும்ப முயற்சித்து கொண்டே இருக்க வேண்டும். இதற்குத்தான் பார்வையை உண்முகமாக்குவது என்று பொருள் என்றார்.

# வீடு தேடி வருவான் விட்டலன் -21

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீஞானேஸ்வரர்-10

எந்த ஒரு விஷயத்திலும் மனதை செலுத்தக்கூடாது என்பதற்காகத்தான், மஹான்கள் தனிமையில் தவம் செய்கின்றனர். தனிமை இல்லாவிடில், யாருடனாவது எதையாவது பேச வேண்டி இருக்கும். பேசிய விஷயத்தை பிடித்துக் கொண்டு மனது கிளம்பும். மனதானது இப்படி கேட்ட, பேசிய, பார்த்த, ஸ்பர்சித்த, எந்த ஒரு விஷயத்தையும் மறக்கவே மறக்காது. காசி யாத்திரை ஒன்றை 20 வருடங்களுக்கு, முன்னர் செய்ததாக வைத்துக் கொள்வோம். அந்த யாத்திரையில், ஒருவரை நாம் பார்த்திருந்தால், 20 வருடம் கழித்தும் அவரை மனது மறக்காது. மறுபடியும் அவரை எங்காவது பார்த்தால், உங்களை நான் காசி யாத்திரையின்போது பார்த்தேனே என்று நினைவு வரும். மனது ஒரு வீடியோ ரெகார்டர் போல. ஆனால் அதற்கு ஒரு time limit என்று எதுவும் இல்லை. ஜன்ம, ஜன்மங்களானாலும் அது மறக்காமல், தனக்குள்ளே பதிவு செய்து வைத்துக் கொள்ளுகிறது. இந்த மனதில் பதிந்துள்ள வாசனைகள், தவம் ஒன்றினால்தான் அழியும். ஒவ்வொருவரும் எந்தவிதமான சாதனை பயில்கின்றனரோ, அது அது அவர்களுக்கு தபஸ்; தபஸினால் வாசனைகள் அழிந்தால்தான், ஞானம் கைகூடும்.

யோகத்தில் போடும் ஆஸனத்தினால், மனதிற்கு பலம் என்பது மட்டுமில்லை. சரீரத்திற்கும் பலத்த நன்மை உண்டு. பத்மாஸனம், பந்த பத்மாஸனம், வீராஸனம், மயூராசனம், குக்குடாஸனம் என்று பல ஆஸனங்கள் இருக்கின்றன. சாதாரணமாக எல்லோரும் சம்மணம் போட்டு அமர்ந்து கொள்வது சுகாஸனம். அப்படி அமருகையில், நேராக நிமிர்ந்து உட்காருவது அவசியம். தலையில் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை இருக்கிறது. நேராக நிமிர்ந்து உட்கார்ந்தால், மூச்சானது தலை வரை போகும். முதுகுத்தண்டிலிருந்து தலை வரை, ஒரே நேர்க்கோட்டில் இருக்க வேண்டும். அப்பொழுது, மூச்சானது

சீராக தலைவரை செல்லும். ஸ்வாஸம் பந்தப்படுமானால், உடலில் சோர்வு ஏற்படும். புத்துணர்ச்சி இருக்காது. தூங்குபவர்களை பார்த்தால், தலை கவிழ்வதை பார்க்கலாம். சுவாஸம் தலைவரை போகாமல் லயப்பட்டு, பந்தப்படுவதால்தான், தூக்கம் வருகையில், தலை கவிழ்கிறது. நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து, ஆஸனம் போட்டு பழகியவனுக்கு, மூச்சு சீராக தலை வரை செல்கிறது. அவனால் தியானம் செய்ய முடியும். தியானம் செய்யும் ஒருவனால் பல மணி நேரம் நிமிர்ந்து உட்கார முடிகிறது என்பது, தியானம் கைகூடியதற்கு சிறந்த ஒரு அடையாளம். தியானம் கைகூடினால், ஒரு கோவில் மணி நன்கு அடித்து ஓய்ந்தபின் ஒரு ரீங்காரம் கேட்பது போல், சப்தம் உள்ளுக்குள்ளேயே கேட்கும். ஹ்ருதயத்தில் இருந்து ப்ரணவத்வனி ஏற்படும். நெற்றிப்பொட்டில் ஒரு ஜோதியின் தரிசனம் ஏற்படும். முதுகுத் தண்டில் இருந்து, ஒரு சிறிய பூரான் ஊர்ந்து போவது போல் தோன்ற ஆரம்பிக்கும். அப்புறம் தெய்வீக காட்சிகள் தோன்ற ஆரம்பிக்கும். இது மிகப்பெரிய விஷயம்.

புலி துரத்தி ஓடிய நிவ்ருத்தி தேவர் நுழைந்த குகைக்குள் அமர்ந்திருந்த கைனிநாதர், இந்த அஷ்டாங்க யோகத்தில் சமர்த்தர். குகைக்குள் நிவ்ருத்தி தேவர் நுழைந்தவுடன், கைனிநாதரை பார்த்தார். கைனிநாதர் நிவ்ருத்தி தேவரின் தலைமேல் கை வைத்தார். மறுகணம் நிவ்ருத்தி தேவருக்கு யோகசித்தி ஏற்பட்டு விட்டது. பரமேஸ்வரனின் அம்ஸம் அல்லவா? ஒரு கணத்தில் ஏற்பட்டு விட்டது. சிறிது காலம் கழித்து, நிவ்ருத்தி தேவர் தாய் தந்தையரிடமே திரும்பி வந்து விட்டார். அவர்கள் மிகவும் சந்தோஷப் பட்டனர். ருக்மிணி, "கண்ணே! உன்னை புலி அடித்து சாப்பிட்டு விட்டதோ என்று நினைத்து பயந்தேன். நல்லவேளையாக திரும்பி வந்தாய்" என்று உச்சி முகர்ந்தாள். (தொடரும்)

> பெற்றெடுத்த தாய், சத்குருநாதர் மற்றும் கடவுள் மூவருக்கும் பட்டிருக்கும் கடன் தீரவே தீராது.
>
> – மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# ஸனாதன கோஸ்வாமி

8

- ஜனனி

ப்ரபு தனது சகோதரனை பற்றி கூறியதை கேட்ட ஸனதானர் கண்களை துடைத்துக்கொண்டு, "அவர் பரமானந்தத்தில் திளைப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தனது இஷ்டமான ஸீதாராமருடன் ஆனந்தமாக இருப்பார். அவரது கடைசி காலத்தில் அவரை தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லையே என்ற வருத்தம்தான் எனக்கு' என்றார்.

ப்ரபு கருணையுடன், "அனூப்பினுடைய நிஷ்டை அலௌகிகமானது என்றும், ஸீதாராம த்யானத்திலேயே, ப்ரஸன்னமாக, அவர் சரீரத்தை த்யாகம் செய்ததாகவும், ரூபர் என்னிடம் கூறினார்" என்று சொன்னார். அப்பொழுது ஸனாதனர் ஒரு முறை அனூப்பை க்ருஷ்ண பக்தி செய்யும்படி வற்புறுத்தியதும், அதற்கு முதலில் இணங்கியபோதும், அவர் மனம் அடைந்த துடிப்பின் காரணமாக, அவர் ராம பக்தியிலேயே ஸ்திரமாக நின்றதான ஒரு ஸம்பவத்தை நினைவு கூர்ந்தார். ப்ரபு இந்த நிஷ்டையை மிகவும் பாராட்டினார்.

பின் ஸனாதனரை, ஹரிதாஸருடன் வஸிக்கும்படி கூறிவிட்டு ப்ரபு சென்றார். நித்யம் இவ்விருவரையும் காண ப்ரபு வருவார். சித்திரை மாதம், ஸனாதனர் பூரிக்கு வந்தார். ஜகன்னாதர் கோவிலுக்குள் செல்லாமல், தூரத்திலிருந்து கொடியை ஸேவிப்பார் ஸனாதனர். அந்த பயங்கர தோல் வ்யாதியால், அவர் உடம்பு முழுவதிலும், ரணகளமாக புண்ணாகியிருந்தது. அதிலிருந்து நீரும் சீழும், எப்பொழுதும் வழிந்து கொண்டேயிருந்தன.

வைகாசி மாதம் ப்ரபு, யமேஷ்வர் டோடா எனுமிடத்திற்கு (பூரியிலிருந்து **4-5**மைல் தூரம்) சென்றார். ஒரு நாள் ஸனாதனரை, அங்கு பிக்ஷைக்கு வருமாறு அழைத்தார். யமேஷ்வர் செல்வதற்கு, இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று, ஸிம்ஹத்வார் வரை சென்று, சாலை வழியாக செல்வது. மற்றொன்று, ஸமுத்ர கரையோடு செல்வது. கோயில் வழியாக சென்றால், பாபியான தன் மேல் பக்தர்கள் பட நேரிடும் என்று

எண்ணி, அந்த வைகாசி மாதத்தில், கொதிக்கும் மணலில் நடந்து யமேஷ்வரத்தை அடைந்தார் ஸனாதனர். அவரது உள்ளங்கால்கள் கொப்பளித்து விட்டன. இதை கண்ட மஹாப்ரபு ஸனாதனரின் தைன்யத்தையும் வினயத்தையும் மனதால் போற்றி நெகிழ்ந்தார்.

"நீரே வைஷ்ணவத்தின் ரஹஸ்யத்தை அறிந்தவன். எந்த விதி நிஷேதங்களும் உனக்கு இல்லாத போதிலும், லோகத்திற்காக, நீ இவ்வாறு நடந்து காட்டுவது போற்றத்தக்கது" என்று மெச்சி, அவரை இழுத்து அணைத்து கொண்டார். இப்படி செய்ததனால், ப்ரபுவின் தங்கம் போன்ற தேஜோமயமான சரீரத்தில், ஆங்காங்கு சீழ் படிந்தது. ஸனாதனர் இதை கண்டு எல்லையில்லா துன்புற்றார். எத்தனை கூறினாலும், ப்ரபு தன்னை ஆலிங்கனம் செய்து கொள்வதை நிறுத்துவதேயில்லை என்று வருந்தினார். அதனால், ப்ரபுவின் தரிசனத்திற்குத்தான் இங்கு வந்தேன். அது கிடைத்தாயிற்று. ரத யாத்திரையன்று ஜகன்னாதரையும் தரிசித்த பின், ரதத்தின் சக்கரத்தில் இந்த உடலை கிடத்தி விட வேண்டியதுதான் என்று முடிவு செய்தார்.

மஹாப்ரபுவிற்கு இவரது மனோபாவம் தெரிந்துவிட்டது. ஒரு நாள் பக்தர்களுடன் கூடி ஸனாதனரிடம் பேச வந்தார். "ஸனாதன! இந்த உடலை விட எண்ணுவது மிகவும் தாமஸிகமான எண்ணம். இதை விட்டுவிட்டு நீ எதை அடைவாய். உடலை விட்டுவிடுவதால், க்ருஷ்ணன் கிடைத்துவிட மாட்டான். மேலும் கிடைக்கதற்கரிய இந்த மனித உடலை கொண்டு க்ருஷ்ண கீர்த்தனமே செய்யத்தக்கது. விவேகிகள் இந்த உடலைப் பற்றி கவலை கொள்ளுவதில்லை" என்றார் ப்ரபு.


(தொடரும்)

தனம் பிறருக்கு கொடுக்க கொடுக்க குறையும்; ப்ரேமையோ, பிறரிடம் வர்ஷிக்க வர்ஷிக்க வளருமே தவிர, நம்மிடம் குறையவே குறையாது.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப்புதிர் பகுதி 79- <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. ஹம்சன், ஜராசந்தன் இவர்களின் உறவு என்ன?
2. ஸ்கந்தனின் ஏழு மாதாக்களின் பெயர் என்ன?
3. ஹா ஹா, ஹூ ஹூ இவர்கள் யார்?
4. ஹிரண்யவர்மாவின் புதல்வி யாரை மணந்தாள்?
5. சஹாதேவன், மஹாபாரத போரில் யாரை கொன்றான்? அவனுடைய வில்லின் பெயர் என்ன? கொடியில் என்ன இருந்தது?
6. விதுரரின் மனைவியின் பெயர் என்ன? புதல்வனின் பெயர் என்ன?
7. நாரதரின் மனைவியின் பெயர் என்ன?
8. சாந்தனுவின் மனைவியான சத்யவதியின் தாயின் பெயர் என்ன?
9. சூர்பணகா, வித்யுஜிஹ்வா இவர்களின் பிள்ளையின் பெயர் என்ன?
10. சேதி தேசத்து அரசனான தமகோஷன் மற்றும் மஹாதேவியின் பிள்ளையின் பெயர் என்ன? அவன் பிறக்கும்பொழுது எப்படி இருந்தான்?



# பாலகர்களுக்கு ஒரு கதை



## சிவாஜியும் சமர்த்தரும்!

சத்ரபதி சிவாஜி முகலாய சாம்ராஜ்யத்திற்கு சிம்ம சொப்பனமாக இருந்தவர். 'சாம்ராட்' என்று பட்டம் சூட்டி கொண்டு, இந்து சாம்ராஜ்யத்தை நிறுவிய மாமன்னர். இப்படி இவர் பெரும் பராக்ரமசாலியாக புகழுடனும் பெருமையுடனும் விளங்கியதற்கு, சிவாஜியின் குரு சமர்த்த ராமதாசரே காரணம். சித்த புருஷரான சமர்த்தரிடம் சிவாஜியை அனுப்பி வைத்தவர், பண்டரிபுர துக்காராம் ஸ்வாமிகள் ஆவார்.

சிவாஜி, குரு சமர்த்தரிடம் மிகுந்த பக்தியுடன் இருந்து வந்தார். குருவின் ஆலோசனையின் பேரிலேயே, எந்த ஒரு காரியத்தையும் செய்து வந்தார். நாட்டில் பல நல்ல சட்டங்களை குருவின் ஆலோசனையின் பேரில் கொண்டு வந்து, எதிரிகளை வென்று வீர ஆட்சி புரிந்து வந்தார்.

சிவாஜியின் பத்னி சூர்யாபாய்க்கு என்றுமே சிவாஜிதான் எல்லாமே. உத்தம பெண்டிருக்கு பதிதானே தெய்வம்? அவள், எதையும் சிவாஜிக்காக பார்த்து பார்த்து செய்வாள். ஒருமுறை அரண்மனை தோட்டத்தில் இருந்து கிடைத்த, ஒரு நல்ல மாங்கனியை ராணி அழகாக நறுக்கி, சிவாஜிக்காக வெள்ளி தட்டில் வைத்து இருந்தார்.

மாங்கனியை ரஸாலம் என்று சொல்லி இருக்கிறது. பார்த்தாலே, சாப்பிடாமலேயே எச்சில் ஊறும் அல்லவா? அலுவலுக்காக வெளியில் சென்றிருந்த சிவாஜியும், இரவில் திரும்பி வந்தார். தன்னை ஆஸ்வாசப்படுத்தி கொண்டு, சயன அறைக்கு வந்தார். அங்கே ராணி தட்டில் நறுக்கி வைத்த மாம்பழ துண்டுகளை தந்தார். அதை பார்த்தவுடன், உடனே எடுத்து சாப்பிட்டிருக்க வேண்டும் சிவாஜி. ஆனால், அவர் கண்களிலோ கண்ணீர் வந்தது. அது அப்படியே வழிந்தோடியது. அதை பார்த்தவுடன், ராணிக்கு பயம் வந்து விட்டது. தாம் ஏதாவது செய்ய கூடாததை செய்து விட்டோமோ என, பதறி விட்டார்.

அப்பொழுது சிவாஜி, "ஏன் இதை எனக்கு

காலையிலேயே கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் குரு சமர்த்தருக்கு சமர்ப்பித்திருப்பேனே? அவர் சாப்பிடுவதற்கு உகந்த அருமையான பழம் அல்லவா இது?'' என்றார் சிவாஜி.

அதை கேட்டவுடன் அப்பாடா என்றிருந்தது ராணிக்கு. கூடவே சிவாஜி, ''எனக்கு எது பிடிக்கும் என்று உனக்கு தெரிய வேண்டாமா? குரு சமர்த்தரை சந்தோஷப்படுத்த வேண்டும் என்றல்லவா நான் எப்பொழுதும் ஆசைப்படுகிறேன்?'' என்றார்.

ராணி பதில் சொல்லாது திகைப்புடன் நின்றிருந்த பொழுது, சயன அறையின் கதவு தட்டப்பட்டது. யாரது? ராஜாவின் சயன அறை கதவை தைரியமாக இரவு நேரத்தில் தட்டுவது? காவலாளிகள் தடுக்கவில்லையா? வேகமாக சென்று சிவாஜி கதவை திறந்தார்.

கதவை தைரியமாக தட்டியது யாரென பார்த்தால், குரு சமர்த்தர் நிற்கிறார்! அவர் வந்தது காவலாளிகள் ஒருவருக்கும் தெரியவில்லை. அவர் மட்டுமே நிற்கிறார். ஆச்சரியமும் சந்தோஷமும் ஆனந்தமும் மேலிட, அவரை விழுந்து வணங்கி வரவேற்று உபசரித்தார் சிவாஜி.

மிக்க உரிமையுடன் ராஜாவின் படுக்கையிலே, அந்த வீர துறவி அமர்ந்து கொண்டார். ராஜா கொடுத்த அந்த மாம்பழ துண்டுகளை எடுத்து கொண்டார். ராணி பால் கொடுத்தாள். அதையும் வாங்கி சாப்பிட்டார். சிஷ்யனான ராஜாவுக்கும், அவன் பத்னிக்கும் ஆசீர்வாத மழை பொழிந்து விட்டு கிளம்பினார். அப்பொழுது பணிவுடன் சிவாஜி, ''ஸ்வாமி! தாங்கள் இவ்விரவில் எப்படி வந்தீர்கள்? வாகனம் எதையாவது அனுப்பட்டுமா'' என்று கேட்டார்.

அதற்கு சமர்த்தர், ''எப்படி இது வந்ததோ அப்படியே போகும்'' என்று சொல்லி விட்டு சென்றார். அதாவது தனக்கு பிறரின் உதவி அவசியமில்லை என்றும், தான் வந்த வழி ஒருவருக்கும் தெரியாது என்பதையும், அப்படி சூசகமாய் சொன்னார்.

சமர்த்தர் போன்ற சித்தபுருஷர்களிடம், இப்படிப்பட்ட பல அதிசய சித்திகள் இருந்தாலும், அவை சீடர்களின் அனுக்ரஹத்திற்காக அவர்களிடம் தோன்றுமே அன்றி, அதை அவர்கள் வெளிக்காட்டி கொள்ளவே மாட்டார்கள்.

**செப்டம்பர் 27** - பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையில் கோவிந்தபுரம் சைதன்ய குடீரம் ப்ரதிஷ்டா தினம் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**செப்டம்பர் 27** - கோவிந்தபுரத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஸ்ரீவிஜி பாலாஜி பாகவதோத்தமர்களால் குருவிட்டல் ஸேவா டிரஸ்ட் மூலமாக, ஸ்ரீஞானானந்தகிரி ஸ்வாமிகளுக்கு ஒரு பாதுகா மண்டபம் நிர்மாணித்து உள்ளனர். அதை பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் தம் திருக்கரங்களால், திறந்து வைத்து, அனுக்ரஹ பாஷனம் வழங்கினார்கள். ஸ்ரீஸ்வாமிஜியும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

**செப்டம்பர் 24** - ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் அவதார தினம் (புரட்டாசி சிரவணம்) ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**அக்டோபர் 17** - மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் சன்னதியில் புரட்டாசி மாத விரத பூர்த்தியான சனிக் கிழமையன்று பெருமாளுக்கு பலவித அன்னம், பழம், பக்ஷணங்கள், அன்னகூடோத்ஸவத்துடன், லட்டு ஸேவையும் மிக விமரிசையாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாலையணிந்து மஞ்சளாடை உடுத்தி அகண்ட தீபம் ஏற்றி விரத பூர்த்தி செய்தனர். நேர்த்திக்கடனுக்காக அங்கப்ரதக்ஷிணம், முடிகாணிக்கை, துலாபாரம் ஆகியன செய்து பெருமாளுக்கு அர்ப்பணித்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் திரு.பம்மல் பாலாஜி பெருமாளுக்கு தீபம் ஏற்றி, மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனை நடத்தினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் தமது திருக்கரங்களால் லட்டு பிரசாதம் வழங்கினார்கள். பெருமாள் ஒவ்வொரு சனிக்கிழமையும் அருகிலிருந்த கிராமங்களுக்கு புறப்பாடு கண்டருளினார். அனைத்து அன்பர்களுக்கும் ஆஸ்ரமத்தில் விமரிசையாக அன்னதானம் அளிக்கப்பட்டது.

**அமெரிக்கா சத்சங்கங்கள் -** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் ராமானுஜம்ஜி அமெரிக்காவில் டெட்ராய்ட் நகரில் அக் 10-15 வரை பாலாஜி கோவிலில் பண்டரி மஹா பக்தர்கள், வல்லபர், சைதன்யர் சரிதங்களை உபன்யாசம் செய்தார். கோபகுடீரம் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றார். 20ஆம் தேதி வரை, சென்ட்ரல் ப்ளோரிடா இந்து கோவிலில் சம்பூர்ணமாக கிருஷ்ண கதையையும், 27ஆம் தேதி வரை போஸ்டன் இந்து கோவிலில் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம் செய்தார். அங்கு ராதா கல்யாணத்தையும் நிகழ்த்தினார். மேலும் போஸ்டனில் Happiness at Work தலைப்பில் EMC Corporate இல் ஒரு பயிற்சி வகுப்பும், Anger Management என்ற தலைப்பில் Love to Share Foundation America சார்பில் பல இளைஞர்களுக்கும் பயிற்சி வகுப்புகளை அவர் எடுத்தார். பலரும் இதில் கலந்து கொண்டு பயனுற்றனர்.


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஸூபலதாஸ் பாபாஜீ-5

வங்காளத்தைச் சேர்ந்த பரமபாகவதர் மற்றும் பண்டிதரான ஸ்ரீஆனந்த கோபால்ப்ரபு, அடிக்கடி ப்ருந்தாவனம் வந்து, தனது கதாம்ருதத்தால், மஹாத்மாக்களுக்கு ஸேவை புரிவார். மஹான்களும் கூட, அவர் கூறும் கதையை கேட்க ஆவல் கொள்வார்கள். ஸூபலதாஸ்பாபாவோ, தனது குடிலிலிருந்து வெளி வரவே மாட்டார். அதனால், இவர் எப்பொழுதும் கதைக்குச் சென்றதே இல்லை. ஆனால், ஒரு முறை ப்ராணகோபால் ப்ரபுவின் வற்புறுத்தலை மீற முடியாமல், பாபா காலக்ஷேபத்திற்குச் சென்றார். ஒரு மதுர லீலையை ஸ்ரீஆனந்தகோபால் கூறக் கூற, பாபாவிற்கு அது அப்படியே கண் முன் தெரிய ஆரம்பித்துவிட்டது. அவர் மூர்ச்சை அடைந்தார். அவரை தோளில் சுமந்து, குடிலுக்கு தூக்கிச் செல்லும்படியாகிவிட்டது.

ஸூபலதாஸ் பாபா தனது வாழ்க்கையில் ஒரு முறை கூட நோய்வாய்ப்படவே இல்லை. 1962-ஆம் ஆண்டு ஜ்யேஷ்ட மாதம் சுக்ல நவமியில், காலை 4 மணிக்கு நல்ல உடல்நிலையோடு இருக்கும்போதே, அவர் பரமமான தாமத்தை அடைந்தார்.

தாமத்திற்கு கிளம்பும் முன் அவர் ஜயநிதாயிதாஸ் பாபாவிற்கு, "ஆஸனத்தை விட்டு நகராதே. எவன் ஒருவன் ஆஸன ஸித்தியை அடைகிறானோ, அவனுக்கு மந்திர ஸித்தி தொலைவில் இல்லை என்பதை தெரிந்துக் கொள். மனது எதிர்த்து தொல்லை கொடுத்தாலும், ஆஸனத்தை விடக்கூடாது. ஒரே ஆஸனத்தில் அமர்ந்து கொண்டே பஜனை செய்வதாலேயே, மனம் தானே அடங்கி, பஜனையில் ஏகாக்ரகம் ஏற்படும்" என்று உபதேசித்தார்.

பாபா சில எழுத்துக்களை கைப்ரதியாக விட்டு சென்றுள்ளார். ஸ்வப்னவிலாஸாம்ருத், அஷ்டகால - ப்ரார்த்தனாம்ருத தரங்கிணி, சிஷு ஸிக்ஷா போன்றவை அவற்றில் சில. (தொடரும்)

ராதே!ராதே!! மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களால் 1995ஆம் வருடம் சென்னையில் ஸ்ரீ சாந்தீபனி குருகுல டிரஸ்டும், தொடர்ந்து ஸ்ரீரங்கம், ஹைதராபாத் ஆகிய இடங்களில் ஸ்ரீ சாந்தீபனி குருகுலமும், சீர்காழி திருநாங்கூரில் ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு ஆகம ப்ரபந்த வேத பாடசாலையும் துவங்கப்பட்டன. மேற்படி பாடசாலைகளில் அத்யயனம் செய்த வித்யார்த்திகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் சொந்த விருப்பத்தில் "*மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய சபா*" என்ற அமைப்பை 29.9.2015 அன்று, குருக்ருபையால் ஏற்படுத்தி உள்ளனர். இந்த அமைப்பின் நோக்கம் லோக க்ஷேமார்த்தமாக வைதீக தர்ம காரியங்களையும், நாமகீர்த்தனம் போன்ற சத்சங்கங்களையும் செய்து வருவதே ஆகும். அதன் முதல் கட்டமாக நிகழும் மன்மத வருடம் ஐப்பசி 22ஆம் தேதி {08/11/15, ஞாயிற்றுக்கிழமை} அன்று நமது ஸத்குருநாதர் *மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்*, மாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹா மண்டபத்தில் நகர ஸங்கீர்த்தனம், ஜபஹோமங்கள், வேத, ப்ரபந்த, இதிஹாஸ, புராண பாராயணங்கள், மஹாமந்த்ர கீர்த்தனம், மதுரகீதம், வேதமகிமை, பக்தசரித்திர உபன்யாசங்கள், மங்கள ஆரத்தியுடன் கொண்டாடப்பட உள்ளது. இந்த வைபவத்தில் அனைவரும் பங்கு கொண்டு ஸ்ரீமாதுரீ ஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் க்ருபைக்கும், குருக்ருபைக்கும் பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: - S.*ப்ரும்மானந்தம்* +91-99403-22117 +91-94441-01502 S.*ஆனந்த்* +91-99417-90476 +91-90032-68070 C.*வேதராமன்* +91-81487-41906 +91-85260-80044 Email - gksabha2015@gmail.com

*ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள்*

*'மதுரகீதம்' பஜனை போட்டி* - for 7-17 year olds

last date to register 16th nov 2015. Prelims on 22nd November;

Contact 9841307152

email -madhurageethamfestiv al@gmail.com

| Dr.பாக்யநாதன்ஜி - ஆஸ்திரேலிய, நியூசிலாந்து சத்சங்கங்கள்<br>Kindly share/pass info with interested friends/relatives in respective regions. | | |
|---|---|---|
| தேதி | இடம் | நிகழ்ச்சி |
| நவம்பர் 8 | Sydney | நாமத்வார் திறப்பு |
| நவம்பர் 9-11, 24-27, 29 | Sydney | மதுர உத்ஸவம், குருப்ரபாவம் |
| நவம்பர் 13-17 | Melbourne | பாகவத தர்மம் |
| நவம்பர் 21 | Adelaide | பாகவத தர்மம் |
| டிசம்பர் 1-4 | Fiji | Need of Hour, பாகவத தர்மம், சத்சங்கம், பிரார்த்தனை |
| டிசம்பர் 5 -9 | Auckland | பாகவத தர்மம், கலிதர்ம உந்தியார், மதுரஸ்மரணம் |
| டிசம்பர் 10 -12 | Wellington | கலிதர்ம உந்தியார், மதுரஸ்மரணம், குருப்ரபாவம் |
| டிசம்பர் 13 -14 | Sydney | சத்சங்கம், மஹாமந்திர தியானம் |

## சனாதனப்புதிர் பகுதி 79 - விடைகள் -ஆத்ரேயன்

1. ஜராசந்தனின் மாப்பிள்ளை ஹம்சன். இவனை பலராமர் யமுனை நதியில் மூழ்கடித்து கொன்றார்.
2. ஹலிமா, காகி, மாலினி, ப்ருஹந்தா, ஆர்யா, பலாலா, வைமித்ரா.
3. கந்தர்வர்கள்; இந்திரனுடைய, குபேரனுடைய சபையில் இருக்கிறார்கள்.
4. சிகண்டியை மணந்தாள்.
5. சகுனி, உலூகன், ருக்மரதன் இவர்களை; கொடியில் வெள்ளியிலான அன்னப்பறவை; வில்லின் பெயர் - அஸ்வின்.
6. மதுவம்சத்து அரசனின் பெண்ணான சம்ப்ரியா; பிள்ளையின் பெயர் அனஸ்வா.
7. சத்யவதி.
8. ஆத்ரிகா என்ற அப்சரஸ் ப்ரும்மாவின் சாபத்தால் மீனாக பிறந்தாள். ஒருநாள் செம்படவனின் வலையில் மாட்டிக்கொண்ட மீனை கத்தியால் குத்தியபொழுது ஒரு பெண் குழந்தை இருந்தது. இதை செம்படவன் வளர்த்தான். இவள்தான் மத்ஸ்யகந்தா என்ற சத்யவதி.
9. சம்புகுமார்.
10. சிசுபாலன்; நான்கு கைகள், மூன்று கண்களுடன் பிறந்தான்.

“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | நவம்பர் 7, 22 டிசம்பர் 7, 21<br>November 7, 22 December 7, 21 |
| நவம்பர் 11 | ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**